**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி</u>**
**<u>அசல் வழக்கு எண். 216/2015</u>**
**<u>நாள் 07/06/2024, வெள்ளிக்கிழமை</u>**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பின் 1-வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10-வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் - சேகர் குருக்கள் | த/பெயர் - ராமநாத குருக்கள் |
| வயது - 64 | தொழில் - |
| விலாசம் - சிவன் கோயில் தெரு, பெருவாயல் கிராமம், கும்மிடிப்பூண்டி வட்டம், திருவள்ளூர் மாவட்டம். | |

**<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u> (PW1)**

எனது சொந்த ஊர் பெருவாயல் கிராமம். எனது முன்னோர்களுக்கும் சொந்த ஊர் பெயருவாயல் கிராமம். வழக்கு கோயில் எங்கு உள்ளது என்றால் பெருவாயல் கிராமத்தில் எனது வீட்டிற்கு எதிராக உள்ளது. கோவிலுக்கு கோவில் இல்லாமல் வேறு என்ன சொத்து உள்ளது என்றால் 3 ஏக்கர் நிலம் உள்ளது. அந்த 3 ஏக்கரில் 6 செண்ட் நிலத்தை தேசிய நெடுஞ்சாலைக்காக அரசு கையகப்படுத்தியது. அதற்கான நஷ்ட ஈடு தொகையை நான் வாங்கினேனா என்றால் வாங்கிக்கொண்டேன். கோயில் பெயரில் வங்கியில் நிரந்தர வைப்பீடு செய்துள்ளேன். எவ்வளவு ரூபாய் எந்த தேதியில் வாங்கி எந்த வங்கியில் வைப்பீடு செய்துள்ளேன் என்றால் ரூபாய் 22 லட்சம் 2017ல் இந்தியன் வங்கி கும்மிடிப்பூண்டி கிளையில் வைப்பீடு செய்துள்ளேன். கோவிலுக்கு வங்கி கணக்கு உள்ளதா என்றால் உள்ளது. அது எங்கே உள்ளது என்றால் இந்தியன் வங்கி கும்மிடிப்பூண்டி கிளையில் உள்ளது. இந்த கோவிலுக்கு எத்தனை சந்நிதி உள்ளது 5 சந்நிதி உள்ளது. நான் ஒருவர் மட்டும் தான் அந்த

கோவில் பணி செய்து வருகிறேன். கோவில் விஸ்தீரணம் எவ்வளவு இருக்கும் என்றால் எனக்கு தெரியவில்லை பட்டா உள்ளது. அந்த கோவில் 1 1/4 ஏக்கரில் அமைந்துள்ளது என முதல் பிரதிவாதி கூறுகிறார் என்றால் அது எனக்கு தெரியாது. பட்டா வேண்டும் என்றால் கொண்டு வந்து கொடுக்கிறேன். 5 சந்நதிக்கும் நானே பூசை செய்து வருகிறேனா என்றால் ஆமாம். கோவிலை நானே பெருக்கி சுத்தம் செய்கிறேனா என்றால் அனைத்தும் நான் தான் செய்து வருகிறேன். நான் எங்காவது வேலை செய்துவருகிறேனா என்றால் இல்லை. கோவில் நிர்வாகம் என்பது பூசை செய்வது மற்றும் கணக்கு வழக்கு பார்ப்பது இரண்டும் சேர்த்தா என்றால் இரண்டும் சேர்த்து தான் பார்த்துக்கொள்கிறேன். வழக்கு சோவில் யாரால் கட்டப்பட்டது என்றும் எவ்வாறு வழி வழியாக நிர்வாகம் செய்யவேண்டும் என்பதை காட்ட ஆவணம் ஏதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல என் தகப்பனார் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். எனது தகப்பனாரின் ஆவணம் என்பது 1984ல் இந்து சமய அறநிலைய துறையில் பிறப்பித்த உத்தரவு என்றால் சரிதான். மேற்படி உத்தரவில் ஆதியில் யார் இந்த கோவில் தோற்றுவிக்கப்பட்டது யார் வழிவழியாக நிர்வாகம் செய்யவேண்டும் என்று அதில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். ஆனால் என்னிடம் அந்த ஆவணம் உள்ளது. 1950ல் இருந்து 2004 வரை எனது தகப்பனார் தான் அந்த கோவிலை நிர்வாகம் செய்துவந்தார் என்றால் சரிதான். 1950ல் இருந்து என் தகப்பனார் கோவிலை நிர்வாகம் செய்து வந்த நிலையில் 1984ல் இந்து அறநிலைய துறையை அனுகி உத்தரவு பெறவேண்டிய தேவை ஏன் ஏற்ப்பட்டது என்றால் 1981ல் மூன்றாம் நபர் ஒருவர் அவரது கோவிலில் ட்ரெஸ்டி என்று சொல்லி வழக்கு தாக்கல் செய்தார் 3 வருடம் வழக்கு நடந்து முடிந்து எனது தகப்பனாருக்கு சாதமாக அந்த வழக்கு தீரப்பு வழங்கப்பட்டது. நானும் 1ம் பிரதிவாதியும் உடன் பிறந்த

அண்ணன் தம்பி என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி தான் மூத்தவர் என்றால் சரிதான்.

**(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப் பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பொன்னேரி.**